# சர்வவியாபி

MISSION PRESS 1840 PONDICHERRY

SARVA VIABI

ESTD:1.3.1907 (Year-115)

22-01-2023 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | சுபகிருது வருடம் ( தை 8 ) | வருட சந்தா ₹ 200 தனிப்பிரதி ₹ 6

புத்தகம் 60 | இதழ் 4 பக்கம்-12 | e-mail:missionpress48@gmail.com e-mail:missionpress48@yahoo.com | Ph: 0413/ 2334360 | ஆசிரியர் : பேரருள்பணி ஆ. அருளானந்தம் துணை ஆசிரியர் : அருள்பணி L.ஆரோக்கியதாஸ்


## நேபாள விமான விபத்தில் இறந்தவர்களுக்கு திருத்தந்தை இரங்கல்



**ஜனவரி 15 அன்று நேபாளத்தின் போக்ஹாராவிற்கு (POKHARA) அருகில் விமானம் விபத்துக்கு உள்ளாகி ஏறக்குறைய 70பேர் உயிரிழந்துள்ள நிலையில், இறந்தவர்களின் ஆன்மா இறைவனில் நிறையமைதி பெற செபித்து தன் இரங்கல் செய்தியினை அனுப்பியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.**

சனவரி 16 திங்கள்கிழமை திருப்பீடத்தூதர் கர்தினால் பியேத்ரோ பரோலின் அவர்கள் கையெழுத்திட்டுத் திருத்தந்தையின் சார்பில் அனுப்பிய இரங்கல் தந்தியானது, நேபாளத்தின் அரசுத்தலைவர் Bidya Devi Bhandari அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**"இறந்தவர்களின் ஆன்மா இறைவனில் நிறையமைதி பெறவும், எல்லாம் வல்ல இறைவனின் இரக்கம் துன்புறும் மக்களுக்கு, குணமளிக்கும் மற்றும் அமைதி தரும் ஆசீரைத் தரவும், மீட்புப்பணியில் ஈடுபட்டிருக்கும் அனைவருக்கும் இறைவனின் ஆற்றல் கிடைக்கப்பெறவும் செபிக்கிறேன்"** என்று அவ்விரங்கல் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

சனவரி 15 ஞாயிற்றுக்கிழமை காலை, காத்மாண்டுவில் இருந்து YETI ஏர்லைன்ஸ் ATR 72 விமானம் வடக்கு நேபாளத்தில் உள்ள சுற்றுலா நகரமான போக்ஹாரா (POKHARA) வுக்கு புறப்பட்டது, விமான நிலையத்தில் தரையிறங்கும்போது விபத்துக்குள்ளானது. கடந்த முப்பது ஆண்டுகளில் நேபாள நாட்டின் மிக மோசமான விமான விபத்துக்களுள் ஒன்றாகக் கருதப்படும் இவ்விபத்தில் நான்கு விமானப்பணியாளர்கள் ஐந்து இந்தியர்கள், நான்கு இரஷ்யர்கள், இரண்டு தென் கொரியர்கள், அயர்லாந்து, ஆஸ்திரேலியா, அர்ஜென்டினா மற்றும் பிரான்ஸ் நாடுகளைச் சார்ந்த ஒருவர் வீதமும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

300 மீட்டர் பள்ளத்தாக்கில் சிதறிக்கிடக்கும் இடிபாடுகளில், இறந்துவிட்டதாகக் கருதப்படும் மூன்று பேரை மீட்புப் படையினர் இன்னும் தேடி வருகின்றனர் என்றும், விமானத்தின் கறுப்புபெட்டி மற்றும் விமானி அறையின் குரல் பதிவுகளையும் மீட்டெடுத்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எவரெஸ்ட் சிகரம் உட்பட உலகின் 14 உயரமான மலைகளில் எட்டு மலைகள் நேபாளத்தில் உள்ளன என்பதும், மலைப்பாதையில் பயணிக்க விரும்பும் சுற்றுலாப் பயணிகளுக்கு மிகவும் பிரபலமானது போக்ஹாரா (POKHARA) நகரம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**விமான விபத்தில் இறந்தவர்களுக்காக விண்ணகத் தந்தையிடம் மன்றாடுவோம்.**

ஆசிரியர் பேனா...

# படைப்பு–உறவு–வாழ்வு

**கட்டளை:** வாழ்வின் ஆதாரமான இயற்கையையும் வாழ்வின் பிறப்பிடமும் இருப்பிடமும் கதியுமாகி கடவுளை நன்றியோடு நினைத்துப் பார்த்து கொண்டாடி மகிழ்வதே பொங்கல் திருவிழா. நிலத்தின் விளைவையும் உழைப்பின் பலனையும் நன்றியாக கடவுளுக்கு காணிக்கை ஆக்குவது மனிதருக்கு ஆசீராக அமையும். வய-ல் நீ விதைத்து, உன் உழைப்பின் முதற்பலன் கிட்டும்போது ''அறுவடை விழா'' (விப. 23:16) கொண்டாடப்படவேண்டும் என்பது கட்டளை. மேலும் 'உன் நிலத்தின் முதற்கனிகளில் முதன்மையானவற்றை உன் கடவுளாகிய ஆண்டவரின் இல்லத்துக்கு கொண்டு செல்வாய்' (விப. 23:19) என்பது ஆண்டவன் இஸ்ராயேல் மக்களுக்கு கொடுத்த கட்டளை.

**இயற்கையோடு ஒன்றிப்பு:** இந்த ஆண்டு பொங்கல் திருவிழாவில் பிரதமர் நரேந்திர மோடி மக்களுக்கு வாழ்த்துச் செய்தியை வழங்கினார். (PTI 15 Jan, 2023) 'இவ்விழா இயற்கையோடு நமக்கிருக்கும் ஒன்றிப்பை (Bond) ஆழப்படுத்துகிறது மற்றும் மகிழ்வின் சூழலை வளர்க்கிறது' என்று தன் உணர்வை வெளிப்படுத்தி இருக்கிறார். உத்தரகாண்ட் மாநிலம், ஜோஷ்மட் நகரம் புதைந்து கொண்டிருக்கின்றது என்பது செய்தி (தினமணி 09-01-2023). மேற்கு வங்கத்தில் இதுபோன்று சில ஊர்கள் புதைந்து கொண்டு வருவதாக அம்மாநில முதல்வர் குறிப்பிடுகின்றார் (17.01.2023 - சன் நியூஸ் செய்தி இதுபோன்ற புதைவுகள், மலைச் சரிவுகள், வெள்ளப்பெருக்கு போன்ற இயற்கை பேரிடர்கள் நமக்கு இயற்கையோடு ஒன்றிப்பு குறைந்துவிட்டது (அ) ஒன்றிப்பு இல்லை என்பதை உணர்த்துகின்றன.

இயற்கையோடு இணைந்த வளர்ச்சி மனிதனை வாழ வைக்கும், மகிழ வைக்கும். மனிதரின் மகிழ்ச்சி வெறும் பொருளாதார, தொழில்நுட்ப வளர்ச்சியோடு நின்று விடுவதில்லை. அப்படி நின்றுவிடும் என்றால் அது மனித சமுதாயத்தின் அழிவுக்கு வித்தாகிவிடும். உலகில் ஆங்காங்கே நிலவும் ஊழல் ம-ந்த நிர்வாகம், வெறுப்பை கக்கும் அநாகரிக கட்சி அரசியல், மனித நேயமற்ற ஆட்சி நிர்வாகம், மனசாட்சியற்ற மத வெறி போன்றவை மனித சமுதாயம் அழிந்து கொண்டிருக்கிறது என்பதற்கு சான்று பகர்ந்து கொண்டிருக்கின்றன.

**உண்மையான மகிழ்ச்சி:** உண்மையான மகிழ்ச்சியும், வளர்ச்சியும் ஒருவர் மற்ற மனிதரோடும், கடவுளோடும் உருவாக்கிக் கொள்ளும் உறவு ஒன்றிப்பில் பிறக்கின்றது, செழிக்கின்றது. இந்த உறவு ஒன்றிப்பை வளர்த்து பாதுகாக்க, நாம் ஓயாமல் செயல்பட வேண்டும். கடவுளுடன் கொண்டிருக்கும் உறவு அதிக கனிதரும் நிலத்தைப் பயிரிட்டு பராமரிப்பது போல கடவுளுடன் கொண்டிருக்கும் உறவையும் பராமரிக்க வேண்டும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் குறிப்பிடுகின்றார். (வத்திகான் ஜனவரி 15, 2023) யாரெல்லாம் மற்ற மனிதனை அன்புகாட்டி அனுசரிக்காமல் பகைத்து வெறுக்கின்றார்களோ அவர்கள் பாராமரிக்கப்படாத கலர் பூமி போன்றவர்கள். 'கடவுள் நம்பிக்கை அறவாழ்வின் தொடக்கம் அன்பு அதன் நிறைவு.' கடவுள் நம்பிக்கையும் அன்பும் எங்க உள்ளதோ அங்கே நேறிய அறவாழ்வு ஊற்றெடுக்கும். (புனித இக்னேசியுஸ் எபேசியருக்கு எழுதிய கடிதம் - குருக்கள் கட்டளை செபம் பொது காலத்தில் 2-ம் வாரம் திங்கள்).

**உறவு மலர:** மனித உறவுகள் மலராமைக்கு பெரிய குறை ஒன்று இருப்பதாகச் சொல்லப் படுகின்றது. 'நாம் மற்றவரை புரிந்துகொள்ள, அவர் சொல்வதைக் கேட்பதற்கு மாறாக, அவருக்கு பதில் சொல்வதற்காக கேட்கிறோம்' என்பதுதான் அக்குறை. மற்றவரை புரிந்துகொள்ள அவர்களுக்கு செவிசாய்ப்போம். அன்பை வெளிப்படுத்தும் இதயம் உள்ளவர்களாக நாம் இருக்க சில வேண்டாத பண்புகளை களைந்தெறிய வேண்டும். வெறுப்பு, பொறாமை, கோபம், எதிர்ப்பு மற்றும் அச்சம் போன்ற பண்புகள் நம்மை அன்பற்ற இதயம் கொண்டவர்களாக மாற்றிவிடும். எனவே இவற்றை நாம் களைந்தெறிந்து நம்மையே பண்படுத்திக் கொள்வது நலம் பயக்கும்.

**இதய நோய்**

**H**atred
**E**nvy
**A**nger
**R**ecentment
**T**imid



படைப்பினை பயன்படுத்துவோம்;
படைப்பைக் காப்போம்
மனிதரை நேசிப்போம் (அன்பு செய்வோம்)
உறவில் வாழ்வோம்.



29-01-2023

## பேறுபெற்றவர்களாக வாழ்வோம்



அருள்திரு. A. தெய்வநாயகம்
பங்குதந்தை, ஆற்காடு.

செப் 2:3;3:12-13; 1கொரி 1:26-31; மத் 5:1-12அ

நாம் குழந்தையாக இந்த மண்ணில் பிறக்கின்ற பொழுது அழகாக இருக்கின்றோம். பிறர் நம்மை கொஞ்சும் அளவிற்கு மழலை மொழி பேசி அவர்களை மகிழ்விக்கின்றோம். வான தூதர்களின் மறு உருவாக நம்மை கள்ளம் கபடற்ற குழந்தையாக பார்க்கிறது இந்த உலகம். நாம் வளர வளர நமது சிந்தனைகள் செயல்பாடுகள் எல்லாம் மாறுபடுகின்றன. நல்லவற்றை தெரிந்தெடுத்தால் நன்மைத்தனங்களோடு மகிழ்வை பெற்றுக் கொள்கிறோம். எதிர்மறையான வாழ்வை தெரிந்தெடுத்தால் நமது வாழ்வு தீமையினை நோக்கிய பயணமாக மாறுகிறது. நல்லவர்களாக வாழ்வதும் தீயவர்களாக நம்மை மாற்றிக் கொள்வதும் நமது கையில் தான் உள்ளது.



இன்றைய நற்செய்தியில் நாம் பேறுபெற்ற பிள்ளைகளாக வாழ இயேசு அழைப்பு விடுக்கின்றார். பழைய ஏற்பாட்டில் மோசே மலை மீது ஏறி கடவுளிடமிருந்து பத்து கட்டளைகளை பெற்றுக் கொண்டார். வாழ்வின் நியதியை இஸ்ரயேல் மக்கள் பின்பற்ற பத்து கட்டளைகள் முதன்மையாக கொடுக்கப்பட்டது. புதிய ஏற்பாட்டில் இயேசு புதிய மோசேயாக, ஒரு புதிய சட்டத்தை வழங்கி, ஒரு புதிய இனத்தை உருவாக்குபவராக இங்கே அறிமுகப்படுத்தப் படுகின்றார். **இயேசுவினுடைய மலைப்பொழிவு நான்கு பகுதிகளை கொண்டுள்ளது.**

1. பேறுகளும் அதைத்தொடர்ந்து சில அறிவுரைகளும் (மத் 5:3-20)
2. பழைய ஏற்பாட்டு சட்டத்திற்கு மாற்றாக இயேசு அளிக்கும் மனித நேய போதனைகள்(மத் 5:21-48).
3. யூத அற செயல்களுக்கு தேவையான உள்ளார்ந்த தன்மை (மத் 6:1-18).
4. புதிய சமுதாயம் உருவாக இயேசு தரும் சில விதிமுறைகள்.

இன்றைய இறைவார்த்தையில் யார் பேறுபெற்றவர்கள் என்பதை நமக்கு தெளிவுபடுத்துகிறார். பேறுபெற்றவர்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய ஆசியையும் அவர் விவரிக்கின்றார்.

"ஏழையரின் உள்ளத்தோர்" யாரைக் குறிப்பிடுகின்றது? ஏழ்மை, அடக்குமுறை, அநீதி போன்ற சூழ்நிலைகள் காரணமாக பல யூத மக்கள் நலிவுற்ற நிலையில் வாழ்ந்து வந்தனர். இத்தகையோர் கடவுளே தங்கள் கதி என்ற நம்பிக்கை கொண்டிருந்தனர். தங்கள் வாழ்வில் கனிவு, இரக்கம், நீதி, தூய்மை போன்ற மதிப்பீடுகளுக்கும் இடம் கொடுத்திருந்தனர். தங்களுக்கு நல்லது நடக்கும் என்ற நம்பிக்கையே இவர்களின் சக்தியாக இருந்தது. இயேசுவின் வருகையால் இவர்களின் நம்பிக்கை வென்றுவிட்டது என்றும் அவர்கள் தாங்கள் எதிர்பார்ப்பதை பெற்றுவிட்டார்கள் என்றும் மலைப்பொழிவின் முதல் பகுதி எடுத்துரைக்கிறது. "ஏழைகளே, நீங்கள் பேறுபெற்றோர் " என்று லூக்கா குறிப்பிடுவது (லூக் 6:20-21), சமூகத்தில் பசி பட்டினியோடும் பல்வேறு தாழ்வுகளோடும் வாழ்ந்து கொண்டிருந்த உண்மையான ஏழைகளையேதான். இயேசுவின் வருகையால் இனி இவர்களின் வாழ்வு மாறும் என்பதுதான் அவர்கள் பெரும் பேறு.

### ஏழையரின் உள்ளம்

மத்தேயு நற்செய்தியாளர் ஏழைகளையும் நடுத்தர வர்க்கத்தையும் செல்வந்தரையும் உள்ளடக்கி பொருளாதார ஏழ்மை நிலை அல்ல மாறாக ஒரு மனிதன் கடவுளை சார்ந்த மனநிலையில் வாழ்கின்ற பொழுது அவன் ஏழையரின் உள்ளத்தை பெற்றுள்ளான் என்கிறார். தன்னை முன்னிலைப்படுத்தாது, தன்னிடம் இருப்பவற்றை பெரிதுபடுத்தாது கடவுளே எனக்கு எல்லாம் என்ற மனநிலையில் இருப்பவர் கள் ஏழையரின் உள்ளத்தை உடையவர். இஸ்ரயேல் மக்கள் தங்களை தேர்ந்தெடுக்கப்பட்ட இனமாக கருதினா லும், கடவுளுக்கு முன் தாழ்ச்சி உள்ளவர்களாக வாழ வேண்டும் என்ற அழைப்பை கொடுக்கிறார்.

எருசலேம் ஆலயத்திற்கு இருவர் செபிக்க வந்தனர், ஒருவன் ஆயக்காரன் மற்றவன் பரிசேயன். இந்த நிகழ்வில் தன்னை தாழ்த்திக் கொண்ட ஆயக்காரன் கடவுளின் ஆசியை பேறாக பெற்றுக் கொள்கிறான்.

எருசலேம் ஆலயத்தில் ஏழைகைம்பெண் இரண்டு செப்பு காசுகளை காணிக்கையாக கொடுத்தாள் (லூக் 12:4). கடவுளின் ஆசியை பேறாக பெற்றுக் கொள்கிறாள். தாவீதின் மகனே என் மேல் இரக்கம் வையும் என்று அழைத்த பார்வையற்ற பார்த்திமேயு பேறுபெற்றவன்.

ஆண்டவரே நீர் என்னுடைய இல்லத்திற்கு அடி எடுத்து வைக்க நான் தகுதியற்றவன், ஒரு வார்த்தை சொன்னால் போதும் என் ஊழியன் நலமடைவான், என்று சொன்ன நூற்றுவர் தலைவன் பேறுபெற்றவன்.

இவ்வாறு நலம் குன்றியவர்கள், இயேசுவிடம் உதவி வேண்டி வந்தவர்கள், இயேசு இதை செய்வார் என்ற நம்பிக்கையோடு வந்தவர்கள் பெற்றுக்கொண்டார்கள். தாழ்ச்சியோடு தங்களை கிறிஸ்துவுக்குள் இணைத்துக் கொண்டவர்கள். எனவே கிறிஸ்து நம்மில் வாழ்கிறார் என்ற உணர்வை நாம் அனுபவிக்கும் போது ஏழையரின் உள்ளத்தினராக, துயருறுபவராக, கனிவுடையவராக, நீதியை நிலைநாட்டும் வேட்கை கொண்டவராக, இரக்கமுடையவராக, தூய்மையான உள்ளத்தினராக, அமைதியை ஏற்படுத்துபவராக, நீதிக்காக துன்புறுத்தப் படுபவராக, பேறுபெறுவோம். கிறிஸ்துவில் நாம் நிலைத்திருந்தால், நாம் அனைவரும் பேறுபெற்றோர்.



## திருத்தந்தை பிரான்சிஸ்

– சுவாமி ஆ. லூயிஸ்.



கடவுளை நம்புவது எளிது ஆனால் காணும் மனிதனை நம்புவது கடினம். காண்பதை அன்பு செய்யாதவர் காணாததை எவ்வாறு அன்பு செய்ய முடியும். வாழ்வை வளமாக வாழ கடவுள் தன் மகன் இயேசுவை அளித்தார். அந்த இயேசுவை திருச்சபை வழங்குகிறது. திருச்சபைக்கு ஊழியனின் ஊழியனாக இருப்பவர்தான் திருத்தந்தை பிரான்சிஸ். ஏனைய ஆயர்கள், கிறிஸ்தவர்கள், இயேசுவின் சீடர்கள். இயேசு இவ்வுலகில் இருந்தபோது நிலவிய கிறிஸ்தவ வாழ்க்கையை இன்றும் திருத்தந்தை ஆயர்கள் வழியாகப் பெற்று வாழ்கிறோம். தலத்திருச்சபையில் ஆயர் நல்லாயனாக இருந்து அறநெறியிலும், நம்பிக்கையிலும் மக்களை வழி நடத்துவது மிகவும் பெருமைக்குரியதாகும்.

**திருத்தந்தை:** திருத்தந்தை பிரான்சிஸ் தனிப்பட்ட முறையில் உரையாடலாய், பொறுப்பாளர் என்ற முறையில் போதிக்கலாம். இவ்வாறு போதிப்பது தவறு இல்லாதது என்பதை நல்லமனதோடு ஏற்றுக்கொள்வோம். திருத்தந்தை பிரான்சிஸ் புனித அசிசியார் பிரான்சிஸ் அவர்களை எளிமைக்கும் அன்புக்கும் ஏற்புடையவராகப் பெயரைத் தேர்ந்துகொண்டார். முதிர்ந்த வயதிலும் உடல்நிலை சரியில்லை எனினும், உயிர்த்த ஆண்டவரின் ஆவியால் நிரப்பப்பட்டவராய் வழிநடத்துவது பாராட்டுக்குரியதாகும்.

**தலத்திருச்சபை:** தலத்திருச்சபையின் அதாவது மறைமாவட்டங்களில் ஆயர்கள் மக்களின் நல்லாயனாக விளங்கி வழிநடத்துகின்றனர். விசுவாசத்தோடு ஆயர்களை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். எதிர்மறையான உணர்வுகளோடு தங்களையோ அயலாரையோ என்றும் எதிலும் காண வேண்டாம். இயேசுவின் இதயத்தி-ருந்து வரும் உணர்வுகளே நமது இதயங்களி-ருந்தும் பொங்கி வழிய வேண்டும். எதிர்மறை உணர்வுக்கு 'தான்', 'தனது' என்பது மூலக்காரணமாகும். இயேசு என்ன சிந்திப்பார், சொல்வார், செய்வார் என்பதே திருச்சபையின் உறுப்பினர்கட்கு ஏற்ற எடுத்துக்காட்டாகும். ‘‘இயேசுவின் பின்னால் நானும் செல்வேன் திரும்பிப் பார்க்க மாட்டேன்.’’

**பங்குகள்:** தேவைக்கு ஏற்ப மறைமாநில ஆயர்கள் பங்குகளை உருவாக்கி, பங்கு குருக்களை நியமித்து பராமரித்து வருவதை நாம் சந்தோஷமாக ஏற்றுக் கொள்வோம். மேல்மட்டத்தி-ருந்து அடிமட்டம் வரை அனைவரும் நல்லாயனாக செயல்படுவது முறையாகும். பணம், பதவி மற்றும் பட்டம் இவைகள் குறுக்கிட்டு தலத்திருச்சபை யைப் போர்க்களம் போல் மாற்றிவிட வேண்டாம்.

திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள், இறை மக்கள் அனைவரும் திருமுழுக்கினால் ஞானப்பிறப்பைப் பெற்றுள்ளோம் என்பதால், சாதி, இனம் இவைகளைப்பற்றிப் பேச இடமில்லை என்பதை மிஷன் நாடாகிய இந்தியாவில் கடைபிடிக்க வேண்டும். உண்மைக்குக் கீழ்ப்படிதல் என்பது எல்லாருக்கும் எப்போதும் தேவைப்படுகிறது. திருச்சபையை விசுவசிக்கிறேன் என்ற நம்பிக்கையை கடைபிடிப்போம்.

## நமது பங்குகளில்

**விக்கிரவாண்டி,** புனித இடைவிடா சாகய அன்னை பங்கில், கோயம்புத்தூர் நல்லாயன் குருத்துவ கல்லூரியின் முதலாம் ஆண்டு இறையியல் அருட்சகோதரர்களுக்கு இறையிலாக்க முகாம் ( 03-01-2023 முதல் 13-01-2023) வரை 10 நாட்கள் நடைபெற்றது. இதன் தயாரிப்பு பயிற்சியினை சேலம் மறைமாவட்ட முன்னாள் ஆயர் மேதகு சிங்கராயன் அவர்கள் வழங்கினார்கள். சகோதரர்கள் மக்களோடு மக்களாக, அக்குடும்பத்தில் ஒருவராக தங்கி அவர்களின் வாழ்வு, தேவைகள், பிரச்சனைகள், சவால்கள் மற்றும் சமூக கட்டமைப்பு போன்ற வாழ்வியல் எதார்த்தங்களை நேரடியாக கண்டு, சமூக நிலையை உணர்ந்து, இறையியல் கண்ணோட்டத்தில் சமூகத்தை புரிந்துகொள்ளும் வாய்ப்பைப் பெற்றனர். பேராசிரியர் அருட்பணி L. டேவிட் ஜான் அவர்கள் இந்த முகாமை ஒருங்கிணைப்பு செய்தார். அருட்பணி A. அற்புதராஜ் விக்கிரவாண்டி பங்குத்தந்தை அனைத்து ஏற்பாடுகளையும் செய்தளித்தார். அனைவருக்கும் நன்றிகள்.

**குருசுகுப்பம்** புனித பிரான்சிஸ் அசிசியார் பங்கில் Love7 என்ற யுடியூப் சேனல் நமது பேராயர் அவர்களால் அதன் இலட்சினை அறிமுகப்படுத்தப்பட்டு தொடங்கப் பட்டது. நவீன தொலைத்தொடர்பு சாதன உலகில், நமது குழந்தைகள் பயன்பெறும் வகையில் DJ Cathechism (Digital Jesus) விவிலிய நிகழ்வுகள் ஆண்டு முழுவதும் வழங்கப்படும். தற்போது "தை அன்னை, தமிழன்னை" என்னும் தலைப்பில் LOVE7 DANCE CONTEST நடத்தப்பட்டு வருகிறது. அருட்பணி. S. செல்வநாதன் அவர்களுக்கும் மற்றும் இணைந்து செயல்படும் இளைஞர்களுக்கும் மற்றும் பங்கு மக்களுக்கும் வாழ்த்துக்கள்.


மிஷன் அச்சக புதிய புத்தக விற்பனை

**உத்தரிக்கும் ஆன்மாக்களோடு எனது அனுபவங்கள்** -மரிய சிம்மா

தமிழாக்கம்

**அருட்பணி அ. ஆரோக்கியராஜ்,** முதல்வர்,
புனித அடைக்கல அன்னை மேல்நிலைப் பள்ளி, விரியூர்.

**விலை ரூ. 100**

தபால் செலவு தனி

மிஷன் அச்சகம்
196, மாதா கோவில் வீதி,
புதுச்சேரி - 605 001.

# எது காணிக்கை?



அருள்திரு. L. ஆரோக்கியதாஸ்,
கியூரியா செயலர், பேராயர் இல்லம்.



பிப்ரவரி மாதம் 2- ஆம் தேதி இயேசுவை கோவிலில் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்ட விழாவை நாம் கொண்டாடுகிறோம். இது ஓர் அர்த்தமுள்ள விழா. பழைய ஏற்பாட்டில் மோசே வழியாக கொடுக்கப்பட்ட சட்டம் யூத மக்களின் மீட்புக்கான கடவுளின் திட்டமாகும், புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்து அனைத்து மக்களின் மீட்புக்கான கடவுளின் திட்டமாவார். புனித சூசையப்பரும், அன்னை மரியாவும் தங்கள் வாழ்வு முழுவதும் கடவுளின் சட்டங்களை தவறாது கடைபிடித்தனர், அதற்கு ஓர் உதாரணம், இயேசுவை கடவுளுக்குக் காணிக்கையாக கொடுத்த நிகழ்வாகும்.

***கேட்டப்பின் கொடுப்பது பிச்சை***
***கேட்குமுன் கொடுப்பது தர்மம்***
***பெற்றுக்கொள்வதற்காக கொடுப்பது கடன்***
***பெற்றுக்கொண்டதிலிருந்து கொடுப்பது காணிக்கை***

மோசேவின் சட்டத்தில் கடவுளிடமிருந்து பெறப்படுகின்ற அனைத்து தலைப்பேறும் ஆண்டவருக்கென ஒப்புக்கொடுக்கப்பட வேண்டும் (லேவி 13:12) என்ற கூறப்பட்டிருப்பதை திருக்குடும்பம் கடைப்பிடிப்பதை நாம் காண்கிறோம். அதன்படியே இஸ்ராயேல் மக்கள் தாங்கள் கடவுளிடமிருந்து பெற்றுக்கொண்டவைகளை (பிள்ளைகள், கால்நடைகள், நிலத்தின் விளைச்சல்கள்) கடவுளுக்கு காணிக்கை யாக்கினர். எனவே நாம் எதையெல்லாம் கடவுளிடமிருந்து பெற்றுக்கொள்கிறோமோ அவற்றை, அவற்றிலிருந்து நாம் கடவுளுக்கு கொடுப்பது நமது காணிக்கையாக மாறுகிறது. பிள்ளையையோ, பொருளையோ அல்லது பணத்தையோ எதை நாம் காணிக்கையாக கொடுத்தாலும் அவற்றை கடவுளிடமிருந்தே பெற்றுக்கொண்டோம் என்பதுதான் உண்மை. கடவுள் கொடுக்காமல் நம்மால் எதையும் பெறவும் இயலாது, எதையும் கொடுக்கவும் இயலாது.

ஊதியம் பெற்றால் ஊதியத்திலிருந்து காணிக்கைக் கொடுப்போம், நல்ல விளைச்சல் பெற்றால் விளைச்சலிலிருந்து காணிக்கை கொடுப்போம், அதிக செல்வம் டிபற்றால் செல்வத்திலிருந்து காணிக்கை கொடுப்போம், நல்ல உடல் நலனைப்பெற்றால் உதவிகளை காணிக்கையாகக் கொடுப்பொம். எதையெல்லாம் பெற்றுகொள்கிறோமோ அவற்றிலிருந்து காணிக்கை கொடுப்போம், நாமே காணிக்கையாகவும் மாறுவோம்.

**"உன்னிடம் மிகுதியாக இருந்தால் மிகுதியாகக் கொடு, குறைவாக இருந்தால் குறைவாகக் கொடு, ஆனால் கொடாமல் மட்டும் இருந்துவிடாதே" - தோபி 4:8**

## வத்திக்கான் செய்திகள்



ஜனவரி 16ஆம் தேதி திங்கள் கிழமை காலையில், கதிரிக்கவியல், நோயாளிகளுக்கான மறுவாழ்வுத் திட்டங்கள் மற்றும் நோய்தடுப்பு துறைகள் போன்றவற்றில் பணியாற்றும் அமைப்புக்களின் பிரதிநிதிகளை திருப்பீடத்தில் சந்தித்து உரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அன்பின் வல்லமையால் தூண்டப்பட்டு கடமையுணர்வுடன் தங்களுக்கு அடுத்திருப்போருக்கு தன்னலமின்றி பணிபுரிவோராகிய அவர்களுக்கு தன் பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

திருஅவையில் ஆண்டு தோறும் சிறப்பிக்கப்படும் கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரமானது 2023 ஆம் ஆண்டு சனவரி 18 முதல் 25 ஆம் தேதி புதன்கிழமை வரை கொண்டாடப்பட உள்ள நிலையில், அதன் 56ஆவது நிறைவுவிழா மாலை செபவழிபாட்டில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் பங்கேற்று சிறப்பிக்க உள்ளார்.

சனவரி 15, ஞாயிறு மூவேளை செப உரைக்குப்பின் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், வருகிற அக்டோபரில் உலக ஆயர்கள் மாமன்றம் நடைபெறுவதற்குமுன், ஆயர்களின் பணியை ஆண்டவரிடம் அர்ப்பணிக்கும் நோக்கத்தில் "கிறிஸ்தவ ஒன்றிப்பு திருவழிபாடு" ஒன்று வருகிற செப்டம்பர் மாதம் 30 - ஆம் தேதி நடைபெறும் என்று அறிவித்தார்.

## 204 வற்றாத நீர் ஊற்று



– **திரு B**. *மேரி ராபர்ட் சாந்திதாஸ், புதுவை–1.*

**வெர்மோண்ட்:** அமெரிக்காவின் வடகிழக்கே அமைந்துள்ள வெர்மோண்ட் இயற்கை எழில் பொங்கும் காடுகள் நிறைந்த மாநிலம். அங்கே பசுமையான மரஞ்செடிகளால் போர்த்தப்பட்ட மலைகள் இயற்கை அழகை அள்ளித் தருவதோடு உல்லாச நடைபயணம் மேற்கொள்ள தகுந்த பாதைகள் நிறைந்த பகுதி.

**உல்லாச நடைப்பயணம்:** ஓர் கோடைகால நண்பகல் வேளையில் வெர்மோண்ட் மலைப்பகுதியில் ஆறுபேர் அடங்கிய ஓர் குடும்பம் உல்லாச நடைப்பயணமாக சென்று கொண்டிருந்தது. அவர்கள் தங்களுக்கு தேவையான உணவு மற்றும் குடி தண்ணீர் எடுத்து சென்றார்கள். ஆனாலும், மலையேற்றத்தின்போது அவர்களுக்கு ஏற்பட்ட தாகத்தால் அவர்கள் கொண்டுவந்த தண்ணீரை எல்லோரும் குடித்துத் தீர்த்துவிட்டார்கள். நேரம் செல்ல செல்ல அவர்கள் அனைவருக்கும் தாகம் அதிகரித்தது. எனினும் அவர்கள் தண்ணீருக்காக அதிகமாக கவலைப்படத் தேவையில்லை என்று எண்ணினார்கள். ஏனெனில் அவர்கள் கைவசம் வைத்திருந்த வழிகாட்டி புத்தகத்தில் அவர்கள் இருந்த இடத்திற்கு மிக அருகில் நீர் ஊற்று ஒன்று இருப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

**நிலையற்ற நீர் நிலை:** அந்த குடும்பத்தினர் அந்த குறிப்பிட்ட இடத்தை அடைந்தபோது அந்த நீர்நிலை வற்றி போயிருப்பதை கண்டு ஏமாற்றமடைந்தார்கள். அவர்கள் அந்த வழிகாட்டி புத்தகத்தை மீண்டும் படித்தபோது அது நிலையற்ற நீர் நிலை என்பது தெரியவந்தது. ஆனால் அதிர்ஷ்டவசமாக அவர்கள் தொடர்ந்து பயணித்த வழியில் மற்றொரு நல்ல நீர் ஊற்று காணப்பட்டது. அதி–ருந்து அவர்கள் அனைவரும் தாகம் தீர நிறைய தண்ணீர் குடித்துவிட்டு மேற்கொண்டு பயணத்திற்கு தேவையான நீரையும் கேன்களில் நிரப்பிக் கொண்டார்கள்.

**வற்றாத நீர் ஊற்று:** நம் வாழ்வின் பாதையின் குறுகிய நிறுத்தங்களில் அநேக நிலையற்ற நம்பகமற்ற நீர் ஊற்றுகள் உள்ளன. அவை சில சமயங்களில் நமக்கு புத்துணர்ச்சியும், புதுத்தெம்பும், திருப்தியும் தந்தாலும் அவற்றின் சீரற்ற தன்மை நம்பகமற்றதாக உள்ளது. நிரந்தரமான வினியோகத்திற்கு நமக்கு நம்பகமான தொடர் ஆதாரம் தேவைப்படுகிறது. கிறிஸ்துவர்களுக்கு மகிழ்ச்சியும், நிறைவையும் கொடுக்கும் தொடர் ஆதாரமாக இயேசு கிறிஸ்து விளங்குகிறார். அவரை அறிந்து ஏற்றுக் கொண்டால் வாழ்வில் சந்திக்கும் நிலையற்ற நீர்நிலைகளை கண்டு கவலைப்படத்தேவையில்லை. அவரிடமிருந்து அளவில்லாத அனேக ஆசீர்வாதங்களை பெற்று மகிழலாம்.

**நற்செய்தி: ....** நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கும் எவருக்கும் என்றுமே தாகம் எடுக்காது. நான் கொடுக்கும் தண்ணீர் அதைக் குடிப்பவருக்குள் பொங்கி எழும் ஊற்றாக மாறி நிலைவாழ்வு அளிக்கும் (யோவா 4:14).

## மனம் மலர



- அருட்தந்தை. P.மரியதாஸ் தர்மபுரி மறைமாவட்டம்.



உதிக்கும் போதும், மறையும் போதும்
சூரியனை ரசிக்கும் உலகம், அது
உச்சியில் இருக்கும் போது மட்டும்
திட்டி தீர்க்கிறது. அது போலத்தான்
மனிதனின் வளர்ச்சியும்
- வாழ்க்கை

நம் வாழ்க்கையின் பிரச்சனைகள்
அழுகையை மட்டுமல்ல
அனுபவத்தையும் கொடுத்து விட்டு
செல்கின்றன...





கை ரேகையைப் பார்த்து
உன் எதிர்காலத்தை
தீர்மானிக்காதே...
கையே இல்லாதவனுக்கும்
எதிர்காலம் உண்டு
என்பதை மறந்து விடாதே...

தொட முடியாத உயரத்தில்
உன் கனவுகள் இருந்தாலும்,
தொட்டுவிடலாம் என்ற
நம்பிக்கையில் நீ போராடு,
தொடரும் வெற்றிகள்
உன்னை...



### சர்வவியாபி சந்தாதாரர்களுக்கு ஒரு முக்கிய அறிவிப்பு

**சந்தாதாரர்கள் தங்கள் ஆண்டு சந்தாவை புதுப்பிக்க வேண்டிய தேதி தங்கள் முகவரியில் பெயருக்குமேல் கொடுக்கப்பட்டுள்ள தேதியாகும்.**

**இதனை கருத்தில் கொண்டு உங்கள் ஆண்டு சந்தாவை புதுப்பிக்க வேண்டுகிறோம்.**

**மறக்காமல் சந்தா எண்ணை குறிப்பிடவும்.**

**- ஆசிரியர்.**



## 20 ஒரு குரு தன் சகோதர குருக்களுக்கு...

அருட்பணி பியர் கையே MEP
ME தமிழாக்கம் Dr.Sr.M.லில்லி மரி ME, புதுச்சேரி.

இந்த புதிய ஆளின் வருகைக்காக சாத்தான்கள் அச்சமுற்று வாய்பொத்தி நின்றன. இறுதியாக அவன் லூசிஃபேரின் அரியணையை நெருங்கினான். அதைப்பார்த்த நரகத்தின் அரசன் எழுந்து தன் புண்பட்ட மாட்சியில் முழுச்சீற்றத்துடன் பின் வரும் வார்த்தைகளைக் கூறினான்:

“மோசமானவனே இங்கு உனக்கு என்ன வேண்டும்? ஏன் இங்கு வந்தாய்? உனக்குத் தேவையான நெருப்பு என்னிடம் இல்லை. உன் பாவத்தைக் கழுவ என்னிடம் தண்டனையும் இல்லை. உன் பாவத்தோடு போ! போய் நரகத்தின் இருள் மிகுந்த மூலையில் உன்னை மறைத்துக்கொள். அங்கு தனித்து நித்தியத்துக்கும் உன் மன உளைச்சலில் மூழ்கிக் கிடப்பாய். போ, இனி ஒருபோதும் என் முகத்தில் விழிக்காதே. நீ அதை அவமதித்துவிட்டாய். உன்னை இங்கு வைத்திருப்பதும் எங்களுக்கு அவமானம். உனக்கும் எனக்கும் உள்ள இடைவெளி வானகத்துக்கும் நரகத்துக்கும் இடையே உள்ள வேறுபாடு போன்றது. நான் நன்றிகெட்டவன் என்பது உண்மைதான். நான் கிளர்ச்சி செய்தவன் என்பதும் உண்மைதான். ஆனால் உன்னைப் போல நான் என் பிரமாணிக்கத்தைக் கடவுளுக்கு வாக்களிக்கவில்லை. உன்னைப் போல நான் துரோகியும் அல்ல. நீ செய்ததுபோல நான் கடவுளின் மகனை விற்கவுமில்லை. உன் பாவத்தில் நீ மட்டுமே தனித்து உள்ளாய். பரிகாரமாகத் தனித்தே கிட போ!”

இது இன்று நிலவும் குருவின் உண்மையான படம். அவமானத்துக்குரிய முறையில் துரோகம் செய்த அவன் கடவுளால் சபிக்கப்பட்டான். பயனற்றவன், ஆபத்தானவன், அழியும் உடல் என மண்ணுலகால் புறக்கணிக்கப்பட்டவன். சாத்தான்களாலேயே கண்டனம் செய்யப்பட்டவன். இதைவிட மோசமானது எது? அது அவனுக்கு உரியது. இவன் பிறவாமல் இருந்திருந்தால் இவனுக்கு நலம்.

### அதிகாரம் 4 நமது தூய அன்னை திரு அவை

நாம் புனிதராகக் கடமைப்பட்டுள்ளோம். நாம் கடவுளின் படைப்புகள் என்பதால் மட்டுமல்ல, நமது எல்லாத் திறன்களையும் பயன்படுத்தி அவரை மகிமைப்படுத்தவும் நமது குருப்பட்ட தினத்தன்று வாக்குறுதி கொடுத்துள்ளோம். ஆனால் நமது கடமை கடவுளுக்கு மட்டுமல்ல. அவருடைய திரு அவையோடும் ஓர் உடன்படிக்கை செய்துள்ளோம். நாம் புனிதராகவும் புனிதரைப்போல எல்லாவற்றிலும் நடந்துகொள்ளவும் கடமைப்பட்டுள்ளோம். அவற்றின் படி நடக்க நாம் மறுக்கும்போதும் அவற்றை நிறைவேற்ற இயேசுவோடு நாம் பேரம் பேசும்போதும் திரு அவை நமக்கு உணவளித்துப் பாதுகாக்கிறது. அப்படியானால் திரு அவையை நோக்கிய நமது செயல் பிரமாணிக்கமற்றதாக இருக்கிறது. அது ஒரு சுத்த அநீதி.

இது இந்த மறையுரையின் மையக்கருத்து. நமதாண்டவர் இந்த உலகைவிட்டுத் தம் தந்தையிடம் திரும்பியபோது அவருடைய பணி முடியவில்லை. இன்னும் முடிக்க நிறைய இருந்தது.



போதகராக, மீட்பராக அவருடைய பணி முடிந்துவிட்டது என்பது உண்மைதான். அவர் ஆண் பெண்களாகிய நமக்குக் கடவுளை நம் தந்தையாகப் பார்க்கக் கற்றுக் கொடுத்தார். அவர் நமக்கு அவரை ஆராதித்து பணிபுரியச் சொன்னார். நமக்கு அவருடைய நற்செய்தியையும் தம் மாதிரியையும் விட்டுச் சென்றார்.

அவர் நமக்காகச் சிலுவையில் உயிர்விட்டு, நம் மீட்புக்காகத் தன் கடைசித் துளி இரத்தம் வரை சிந்தினார். நமக்கு முன் வானகத்தின் கதவுகளைத் திறந்து வைத்தார். அருட்சாதனங்கள் நிறுவப்பட்டன. அஞ்ஞானம், சிலை வழிபாடு, பாவம் எல்லாம் இன்னும் எங்கும் ஆட்சி செய்கின்றன. நற்செய்தி போதிக்கப்பட வேண்டும். அவருடைய போதனை எல்லோரையும் சென்றடைய வேண்டும். ஆண்களும் பெண்களும் அவருடைய போதனையைக் கேட்டுத் திருமுழுக்குப் பெற வேண்டும். பாடுகளின் பலன்கள் எல்லா ஆன்மாக்களுக்கும் கிடைக்க வேண்டும். இன்னும் பல நூற்றாண்டுகளுக்கும் உலகம் முடியும் வரையிலும் அவை சென்றடைய வேண்டும்.

எனவேதான் இந்தக் கண்ணீர்க் கணவாயிலிருந்து விடை பெறுமுன் அவர் திரு அவையை நிறுவினார். அதன் பணி தொடர்ந்து நிகழ்ந்து முடிவு பெற வேண்டும் என்று விரும்பினார். என் தந்தை என்னை அனுப்பியது போல நானும் உங்களை அனுப்புகிறேன். எனவே சென்று எல்லா நாடுகளுக்கும் போதியுங்கள். நம்பிக்கை கொள்பவர்களுக்குத் தந்தை, மகன் தூய ஆவியின் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள். நம்பிக்கை கொள்ளாதவர் தண்டனை பெறுவர். உலகின் கடை எல்லை வரை எனக்குச் சாட்சிகளாக இருங்கள்.

திரு அவை தன்னை நிறுவியவரிடமிருந்து பெற்றுக்கொண்ட பணிக்குப் பிரமாணிக்கமாக இருந்து தொடக்கத்தில் இருந்து நற்செய்திப் பணியை நிறைவேற்றி வருகிறது. மறைப்பணியாளரை உலகின் எல்லாப் பகுதிகளுக்கும் அனுப்பி வருகிறது. பூமியின் பாதைகள் எல்லாம் திருத்தூதர்களின் இரத்தத்தால் சிவந்துள்ளன. அவர்கள் தங்களுடைய எஜமானைப் போலவே எந்த நாட்டுக்கு அனுப்பப் பட்டார்களோ அந்நாட்டு மக்களின் மீட்புக்காக மறைசாட்சியராக உயிர் கொடுத்தார்கள்.

1900 ஆண்டுகளுக்குப் பின்னரும் மறைப்பணியாளர்கள் அனுப்பப்படுகிறார்கள். மறைப்பணியாளர்களின் இரத்தம் சிந்தப்பட்டபோதும் மறைப்பணி முடிவு பெறவில்லை. நடைமுறையில் திருஅவையின் பணி இன்னும் முடிவு பெறவில்லை. எல்லோரும் மனமாற்றம் அடைந்து திருமுழுக்குப் பெற்ற பின்னும் மறைப்பணி மக்கள் மீது அக்கறை கொள்ள வேண்டியுள்ளது.

எனவே திரு அவைக்குத் தொடர்ந்து பணியாளர்கள், தூதுவர்கள் தேவை. அவர்கள் நற்செய்தியைப் போதித்து அருட்சாதனங்களை வழங்க, ஆன்மாக்களை மீட்க இயேசு தொடங்கின பணியைத் தொடர வேண்டும்.

-தொடரும்



# கைமேல் பலன்

- திரு. அல்போன்ஸ் மோசஸ்
புதுச்சேரி-9.



அந்த தொழிற்சாலையில் நான் மேலாளராகப் பணிபுரிந்த போது எனக்கு உதவியாளராக இருந்தவன்தான் செந்தில். நான் சொல்லுகின்ற வேலைகளைக் குறித்த நேரத்தில் செய்து முடிப்பதுதான் அவனது வேலை. பெரும்பாலான நேரங்களில் கால தாமதமாகச் செய்து என்னிடமிருந்து பாட்டு வாங்கியதும் உண்டு.

நான் ஏதாவது சொன்னால் அவனுக்கு எரிச்சல் உண்டாகும் அதுவே சில நேரங்களில் கோபமாகவும் முடியும். இப்படியே நாட்கள் சென்று கொண்டிருந்தன

ஒருநாள் திடீரென்று தனது பணியை இராஜினாமா செய்வதாக கடிதம் எழுதி என்னிடம் கொடுத்தான். நான் அதைப் பெற்றுக்கொண்டு அதற்கான காரணத்தைக் கேட்டபோது "அட போயா! உன்னிடம் யார்தான் வேலை செய்வான் எப்போதும் சுடுமூஞ்சாக இருக்கிற நீயும் வேண்டாம் உன் வேலையும் வேண்டாம்" என்று கூறிக் கொண்டே இராஜினாமா கடிதத்தை டேபில் மெலே வைத்துவிட்டுச் சென்று விட்டான்.

மூன்று நாட்கள் சென்றதும் வந்து, தான் வேலை செய்த காலத்திற்கான சம்பளத்தைக் கொடுக்குமாறு கேட்டான். ராஜினாமா செய்பவர்களிடமிருந்து அதற்கான காரணத்தை அறியும் படிவத்தினை அவனிடம் கொடுத்து அதைப் பூர்த்தி செய்து கொடுக்கும்படி கேட்டேன். அவனும் அதை வாங்கி அதில் ஏதோ கிறுக்கிவிட்டு கையொப்பமிட்டு என்னிடம் கொடுத்தான்.

அதைப் படித்துப் பார்த்த எனக்கு தலை சுற்றியது. அதில் என்னை ஒரு சர்வாதிகாரி எனவும், தொடர்ந்து பணி செய்ய விரும்பவில்லை எனவும் குறிப்பிட்டிருந்தான்.

"சரி போகட்டும் விடு" என என் உள் மனத்திற்குச் சொல்லிவிட்டு அன்றாட வேலையைக் கவனிக்க ஆரம்பித்தேன். நான் சொன்னதெல்லாம் அவனது முன்னேற்றத்திற்காக என்பதை அவன் உணர வேண்டும் என்று பிராத்தித்தேன்.

நாட்கள் உருண்டோடின. சுமார் 5 ஆண்டுகள் கழிந்திருக்கலாம். ஒரு நாள் நான் அலுவலகம் செல்லும்போது வழக்கமாகச் செல்லும் சாலையில் வாகன நெரிச்சல் அதிகமாக இருந்ததால் மாற்றுப்பாதையில் சென்றேன். அங்கே ஒரு காவல் துறை அதிகாரி என்னை வழிமறித்தார். எனக்கு தூக்கி வாரிப்போட்டது. நான் என்ன தப்பு செய்தேன் என்று ஒரு நிமிடம் கலங்கிப் போனேன்.

"ஐயா என்னைத் தெரிகின்றதா நான் தான் உங்க கிட்ட வேலை செய்த செந்தில். அப்போதெல்லாம் நீங்க சொன்ன அறிவுரைகளைக் கேட்காம உதாசீனப்படுத்தி உங்களிடமிருந்து பிரிந்து சென்றேன். ஆனால் நான் சென்ற இடத்தில் என்னைச் செதுக்க யாருமேயில்லை. எல்லாரும் என்னிடம் குறைமட்டும் கண்டுபிடித்து என்னை உதாசீனப்படுத்தினார்கள். அப்போதுதான் உங்க அருமை எனக்குப் புரிய ஆரம்பித்தது.

தவறு செய்தபோது திட்டினாலும் அடுத்த நிமிடம் அதையெல்லாம் மறந்து நீங்க என்மீது காட்டிய அன்பு மாதிரி யாரும் என்னிடம் நடந்து கொள்வதில்லை. போகப்போக உங்களைப் பற்றி உணர்ந்து கொண்டேன். அன்றைக்கு என்னிடமிருந்த வேண்டாதவற்றை நீங்க நீக்கி என்னை நன்றாகச் செதுக்கினதால்தான் நான் இன்று ஒரு காவல் துறை அதிகாரியாக பணிபுரிகின்றேன். இராஜினாமாவிற்கு நான் சொன்ன காரணத்திற்காக மனம் வருந்துகிறேன். என்னை மன்னித்து விடுங்க" என்று கண் கலங்கினான்.

நான் செய்த நற்செயல்களுக்கு எனக்கு கை மேல் பலன் கிடைத்தது குறித்து நான் மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். நடந்தவற்றை சீர்தூக்கி ஆராய்ந்து பார்த்தால் எல்லா வழிகளும் நமக்கு நல்லவையாகவே இருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

# நான்காவது ஞானியின் கதை

திரு. ஜெயராஜ் தானியேல்,
முத்தியால்பேட்டை, புதுவை-3

4 தொடர்ச்சி



"ஆகவே, தந்தையே, நண்பர்களே, கேளுங்கள்! மிகத் தொன்மையான அடையாளங்கள் மூலம் நான் பெற்ற புதிய ஒளி மற்றும் சத்தியத்தை உங்களுக்குச் சொல்லப் போகிறேன். நாம் ஒன்றிணைந்து இயற்கையின் ரகசியங்களைத் தேடினோம். நீர், நெருப்பு மற்றும் தாவரங்களின் குணமளிக்கும் பண்புகளை ஆராய்ந்தோம். புரியாத வார்த்தை களில், தெளிவற்ற மொழியில் எதிர்காலத்தை முன்னறிவிக்கும் நூல்களையும் படித்தோம். ஆனால், விண்மீன்களை ஆராய்வதொன்றே எல்லாவற்றிலும் மேன்மையானது. அவைகளின் வழித்தடத்தை நுட்பமாய் கண்டுபிடிப்பதன் நோக்கம் வாழ்க்கையின் தொடக்கம் முதல் இறுதி வரையிலான மர்ம முடிச்சுகளை அவிழ்ப்பதுதான். அவற்றைத் துல்லியமாகக் கடைப்பிடித்தால் அனைத்தும் தெளிவாகும். ஆனால் அது குறித்த அறிவு முழுமையடையவில்லை, அல்லவா? இன்னும் நமது அறிவுக்கெட்டாத விண்மீன்கள் தொலைவில் தெற்குப் பகுதியில் (சர்வ சுகந்தி மரங்கள் நிறைந்த பண்ட் பிரதேசம் மற்றும் ஓ.்.பிரின் தங்கச் சுரங்கங்களில் வசிப்பவர்களுக்கு மட்டுமே தெரிந்த ஒளிவிளக்குகள்) இருக்கின்றன, தெரியுமா?" என்று அர்தபன் மிகவும் அமைதியாக கூறினார்.

கூட்டத்தில் அதை ஆமோதிப்பது போன்றதொரு சலசலப்பு எழுந்தது. நித்தியரின் எண்ணங்கள், விண்மீன்கள்! எண்ணற்றவை! ஆனால் மனிதனின் எண்ணங்களை அவனது வாழ்நாளைக் கணக்கிடுவது போல எண்ணிவிடலாம். பூமியில் உள்ள அனைத்து ஞானங்களிலும் ஞானியின் ஞானம் மிகச்சிறந்தது. ஏனெனில் அது தன் அறியாமையை அறிந்திருக்கிறது. அதுவே ஆற்றலின் ரகசியம். எப்போதும் மனிதர்களை ஒரு புதிய சூரியோதயத்திற்காக எதிர்பார்த்து காத்திருக்க வைக்கிறோம். ஆனால் இருளும் ஒளியும் சமம் என்றும், அவைகளுக்கிடையேயான மோதல் ஒரு போதும் தீராது என்பதையும் நாம் மட்டுமே அறிந்திருக்கிறோம் என்று கூறினார்டைக்ரேன்ஸ்.

அதில் எனக்கு உடன்பாடில்லை. முடிவேயில்லாமல், அடையமுடியாததற்காகக் காத்திருப்பது புத்திசாலித்தனம் அல்ல. கிரேக்கர்களின் புதிய ஆசிரியர்களைப் போல் நாம் மாற வேண்டும். சத்தியம் என்று எதுவும் இல்லை என்று கூறும் அவர்கள், உலகில் பொய்யான நம்பிக்கைகளைக் கண்டுபிடித்து அம்பலப்படுத்துவதில் தங்கள் வாழ்நாளை செலவிடுபவர்கள்தான் உண்மையான ஞானிகள் என்கிறார்கள். ஆனால் புதிய சூரியோதயம் கண்டிப்பாக குறித்த நேரத்தில் நிகழும். பழையன ஒழிந்து, மாண்பை ஒளியின் பிரகாசத்தை மனிதர் காண்பர் என்று நமது நூல்கள் கூறவில்லையா? என்று பதிலளித்தார் அர்தபன்.

உண்மை, என்ற அப்காரஸ் தொடர்ந்து, ஜோராஸ்டரின் ஒவ்வொரு விசுவாசமான சீடரும் அவெஸ்டாவில் குறிப்பிடப்பட்டுள்ள தீர்க்கதரிசனங்களை இதயத்தில் சுமந்துகொண்டிருக்கிறார். குறித்த நாளில் கிழக்கிலுள்ள தீர்க்கதரிசிகளின் நடுவிலிருந்து வெற்றிவீரர் சோசியோஷ் எழுந்தருள்வார். அவரைச் சுற்றிலும் ஆற்றல் வாய்ந்தவொரு பிரகாசம் ஒளிரும். அவர் ஜீவனை நித்தியமானதாகவும், அழியாததாகவும், இறவாமையுடையதாகவும் ஆக்குவார். மேலும் இறந்தவர்கள் உயிர்த்தெழுவார்கள்.

-தொடரும்

# உமது அரசு வருக



திரு *A.* **யூஜின்,** காரைக்கால்.

நாம் அனைவரும் தினமும் குறைந்தது பத்து முறையாகிலும் உச்சரிக்கும் செபம் இதுதான். ஆண்டவர் இயேசு தன் சீடர்களுக்கு இந்த செபத்தை கற்றுக்கொடுத்த போது, தந்தையின் அரசு வருக என்று செபிக்கச் சொன்னார். இந்த செபத்தின் பகுதி முழுவதும் இக்கருத்தையே மையமாக வைத்தார்.

**உமது அரசு வருக** என்று செபிக்கும் போது என்ன புரிந்து கொள்கிறோம்? இந்த வார்த்தைகளை வெறுமையாக கடந்து போய் விடுகின்றோமா? ஒவ்வொரு கிறிஸ்துவனின் உயிர் தேடுதலும் இங்கேதான் தொடங்குகின்றது. வாழ்நாள் முழுவதும் தேட வேண்டிய புதையல் இது. எனக்குள்ள எல்லாவற்றையும் விற்றுவிட்டு வாங்க வேண்டிய புதையல் இது. எனவேதான் ஆண்டவர் இயேசு "முதல் முத-ல் இறைவனின் அரசையும், அவருக்கு ஏற்புடையதையும் தேடுங்கள்" (மத் 6:33) என்று கூறுகிறார்.

**ஒருநாள் இயேசு தன் சீடர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தபோது,** "இறையரசு உங்கள் நடுவேதான் செயல்படுகின்றது" (லூக் 17:22) என்றார். இயேசுவின் புனித பிரசன்னத்தில்தான் அவர்கள் நின்று கொண்டிருந்தார்கள். என்றாலும் இறையரசை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. பின் தொடர்ந்த ஆண்டுகளிலும் சீடர்கள் அப்படித்தான் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். ஆண்டவர் இயேசு இறையரசு இப்போது உங்கள் நடுவில்தான் உள்ளது உணர்ந்து வாழுங்கள் என்று நமக்கும் சொல்கிறார். ஆண்டவரது பொது வாழ்வு முழுவதும் அவர் தந்தையின் அரசு பற்றி மட்டுமே பேசிக்கொண்டிருந்தார்.

இயேசுவின் முப்பத்துமூன்று ஆண்டுகளும் எப்படிப்பட்ட மனநிலையில் வாழ்ந்தார் என்பதை அவர் தனது கடைசி நாளில் வெளிப்படுத்துகிறார். "என் அரசு இவ்வுலகைச் சார்ந்தது இல்லை" (யோவா 18:36) என்கிறார். இவ்வுலகில் தான் அவர் வாழ்ந்தார், உறவுகளுடன் இருந்தார், மக்களுடன் மக்களாக பயணித்தார் என்றாலும் தினமும் அவர் அவரது அரசில், அவரது அரசர் உறவில்தான் இருந்தார். ஆனால் நாமோ நாம் வாழும் இந்த உலக அரசு நிரந்தரம் என்று வாழ்கிறோம். எனவேதான் உண்மையான அரசு பற்றி நம்மால் எண்ணிப் பார்க்க முடியவில்லை.

சீடர்களுடன் இயேசு நின்றுகொண்டிருந்தபோது தந்தை கடவுளை என் தந்தை என்று அழைக்காமல் எங்கள் தந்தையே என்று அழைக்கிறார் 'எங்கள் தந்தை' என்ற இந்த வார்த்தை ஒரு புது உறவை-சகோதர உறவை (Universal brotherhood) உணர்த்துகின்றது. இதற்கு முன் உள்ள சொற்றொடரில், அதாவது "நீங்கள் கேட்கும் முன்பே உங்கள் தேவையை உங்கள் தந்தை அறிந்துள்ளார் என்று தெளிவுபடுத்துகிறார்" (மத் 6:8). இந்த உறவின் உண்மை நிலையை - அவரது உயிர்ப்பின் போது மகதலா மரியாளிடம் மீண்டும் உறுதிபடுத்துகிறார். "என் தந்தையும் உங்கள் தந்தையும், என் கடவுளும் உங்கள் கடவுளுமானவரிடம் செல்லுகிறேன்" (யோவா 20:17) என்கிறார். இதே உறவு முறைமையை புனித பவுலடியார் வழியாக மீண்டும் தெளிவுபடுத்துகிறார் (எபி 2:11) தூய்மை யாக்குகிறவர், தூய்மையாக்கப்படுபவர் அனைவருக்கும் உயிர் முதல் ஒன்றே. இதனால் இயேசு இவர்களைச் சகோதரர் சகோதரிகள் என்று அழைக்க வெட்கப்பட வில்லை என்கிறார் இயேசுவை தந்தை எந்த அளவில் அன்பு செய்கின்றாரோ அதே அளவில் நம்மையும் அன்பு செய்கிறார் என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

**இயேசு வழியாக, நாம் தந்தையின் மக்களாக இணைக்கப்பட்டிருக்கிறோம்.** ஒரே தந்தையின் மக்களாக நாம் இருப்பதால், நம்முடன் வாழும் எல்லாரும் சகோதர முறை ஆகின்றனர். ஆனால் நாம் வெளிப்படுத்தும் இன, மொழி, சாதி, பொருளாதார, சமுகம் சார்ந்த வேற்றுமைகள் நம் கடவுளை காயப்படுத்துகின்றன. புனித பவுல் இன்று நம்மிடையே வாழ்வாரெனில் இப்படியும் ஒரு திருமுகம் நமக்கென்று எழுதுவார் கிறிஸ்துவோடு இணைந்திருக்கும் படி திருமுழுக்குப் பெற்ற நீங்கள் அனைவரும் கிறிஸ்துவை அணிந்து கொண்டீர்கள். இனி உங்களிடையே பாதர் என்றும் கிரேக்கர் என்றும் அடிமை என்றும் உரிமை குடிமகன் என்றும் இல்லை. ஆண் என்றும் பெண் என்றும் வேறுபாடு இல்லை. கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள நீங்கள் அனைவரும் ஒன்றாய் இருக்கின்றீர்கள் (கலா 3.27-28) நாம் நமது வேற்றுமைகளில் காட்டும் வெறி கிறிஸ்து ஆண்டவரை மீண்டும் சிலுவையில் அறைகின்றது என்று புரிந்து கொள்கிறோமா?

நாம் வாழும் நாட்களில், நாம், நம் உள்ளத்தில் எவ்வாறு தந்தையின் அரசை நிறுவ முடியும்? தந்தையின் அரசு முத-ல் எனக்குள் என் குடும்பத்தில் வரட்டும். ஆண்டவர் இயேசு இப்படி செபிக்கச் சொல்கிறார். உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுக. எனவே கடவுள் திருவுளம் நம்மில் நடைபெற ஏற்றுக்கொள்வோம். மரியாள் போல இதோ உமது அடிமை உமது வார்த்தைபடி எனக்கு ஆகட்டும் என்று சொல்வோம். இரண்டு கேள்விகளை நம் வாழ்வில் தவிர்ப்போம். ஒன்று எனக்கு மட்டும் ஏன் இப்படி நடக்கிறது? ஆண்டவர் ஏன் என்னை இவ்வளவு கொடுமைபடுத்துகிறார்? இரண்டாவது கேள்வி. இன்று ஒரு நாள் மட்டும் என் விருப்பம் போல வாழ்ந்து கொள்கிறேன். அது என்ன பெரிய தவறா?



# தீரத் தியாகி

**(புனித தேவசகாயம் வரலாறு)**

- Dr. **தீபக் தாமஸ்,**
பல் மருத்துவர், புதுவை.



ஆண்டவரின் அருளால்
செபஸ்தியார்
பல அதிசயங்களை நிகழ்த்தினார்.
அவற்றுள் ஒன்றாய்
ஊமைப் பெண்ணை பேச வைத்தார்.

செபஸ்தியாரின்
வீரமும் விவேகமும் மட்டுமே
செய்தியாய் கேட்ட
மாமன்னனும் அவரை
படைத்தளபதியாக்கினான்.
செபஸ்தியார்
ஒரு கிறித்தவர் என
அப்போது மன்னனுக்கு தெரியாது.



"மன்னருக்கு
நீ கிறித்தவன் என தெரியாது
தெரியவந்தால் மரணிப்பாய்"
என எச்சரிக்கை செய்தனர் பலர்.

செபஸ்தியாரோ
எதற்கும் கவலைப்படாமல்
இறைவார்த்தையை
எல்லோர்க்கும் பரப்பினார்.
அவரின் போதனையால்
பொதுமக்கள் பலரும்
இறைமகன் இயேசுவின்
பொற்பாதம் பணிந்து
தீவிர கிறித்தவர்களானார்கள்.



மன்னனுக்கு செய்தி எட்டியது.
சினமுற்ற அவன்
செபஸ்தியாரை அழைத்து
கிறித்தவத்தை கைவிடச்சொல்-
கட்டளையிட்டான்.

செபஸ்தியாரா செய்வார்?
"முடியாது மன்னா" என
முகத்திலடித்தாற் போல்
சொல்-விட்டார்.
மன்னனுக்கு பெருங்கோபம்
மரணதண்டனை விதித்துவிட்டான்.
செபஸ்தியார் பட்ட மரத்தில்
கட்டி வைக்கப்பட்டார்
அவரின் மேல் அம்புமழை பொழிந்தது.

- தொடரும்

## விண்ணக வாழ்வின் முதல் வருட நினைவு அஞ்ச-

மண்ணில் : 01-01-1937



விண்ணில்: 30-01-2022

திருமதி ஜெயா (எ) ரீத்தா
**அன்னுகுழந்தை நல்லம்மாள் லூர்து**

*ஆண்டவரின் இல்லத்தில் என் வாழ்நாள் எல்லாம் நான் குடியிருக்க வேண்டும். - திபா 27:4*

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 30-01-2023 திங்கள் காலை 6.00 மணிக்கு புனித ஜென்மராக்கினி அன்னை பேரோலயத்தில் திருப்ப- நிறைவேற்றப்படும். இதனை கண்ணுறும் அனைவரும் இவரின் ஆன்ம சாந்திக்காக செபிக்க வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்
மகன்கள், பேரப்பிள்ளைகள் மற்றும்
குடும்பத்தினர்.

## விண்ணக வாழ்வின் 15-ம் ஆண்டு நினைவு அஞ்ச-

தோற்றம் :14-02-1936



மறைவு: 21-01-2008

**திரு. L. இருதயநாதன்**

"நித்திய இளைப்பாற்றியை இவருக்கு அளித்தருளும் ஆண்டவரே! முடிவில்லாத ஒளி இவர்மேல் ஒளிர்வதாக"

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 21-01-2023 சனி மாலை 5.15 மணிக்கு நெல்-த்தோப்பு, புனித விண்ணேற்பு அன்னை ஆலயத்தில் திருப்ப- நிறைவேற்றப்படும். இதனை கண்ணுறும் அனைவரும் இவரின் ஆன்ம சாந்திக்காக செபிக்க வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்
மனைவி, மகன்கள், மகள்கள்,
மருமகன்கள், மருமகள்கள், மற்றும்
பேரப்பிள்ளைகள்.

## விண்ணக வாழ்வின் முதல் ஆண்டு நினைவு அஞ்ச-

தோற்றம் 20-01-1962



மறைவு 22-01-2022

**லூயிஸ் செபஸ்டியன் ஜஸ்டின்**

Goldsmith

"நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன். என் ஓட்டத்தை முடித்துவிட்டேன். விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்"
- 2தீமோ 4:7

22-01-2023 ஞாயிற்றுக்கிழமை பகல் 11.00 மணிக்கு புதுவை புனித ஜென்ம ராக்கினி அன்னை பேராலயத்தில் திருப்ப- நிறைவேற்றப்படும்.

பிரிவால் துயருறும்

தந்தை: **லூயிஸ் மரி ஜோசப்**
மனைவி: **மேரி சாந்தி**
**மகள்கள், மருமகன்கள்**
**மற்றும் பேரக்குழந்தை**

# விண்ணக வாழ்வின் 9–ஆம் ஆண்டு நினைவு அஞ்ச–

*"தூய உள்ளத்தோர் பேறுபெற்றோர், ஏனெனில், அவர்கள் கடவுளைக் காண்பர்." (மத் 5:8)*











**தோற்றம்**
**26-04-1947**

**மறைவு**
**22-01-2014**

## திருமதி. தாசு கஸ்தூரிபா

*"இவரே ஆண்டவரிடமிருந்து ஆசி பெறுவார் தம் மீட்பராம் கடவுளிடமிருந்து நேர்மையாளர் எனத் தீர்ப்புப் பெறுவார்" - திபா 24:5*

### ஜெபம்

அன்புத்தந்தையே இறைவா! தன் வாழ்க்கையில் இயேசுவின் வாக்குப்படி நடந்து, அனைவரையும் அன்பு செய்து அரவணைத்து, வழிகாட்டியாக வாழ்ந்து எங்களை விட்டுப் பிரிந்து உம் திருப்பாதம் வந்து சேர்ந்துள்ள என் அன்பு மனைவி

## தாசு கஸ்தூரிபா

அவர்களுக்கு முடிவில்லா பேரின்பம் அளித்து உமது பரிசுத்தர் கூட்டத்தில் சேர்த்தருளும்.

22-01-2023 ஞாயிறு காலை 7.30 மணிக்கும், மதியம் 12.00 மணிக்கும் திரு இருதய ஆண்டவர் பசி–க்காவில் திருப்ப– நிறைவேற்றப்படும். இதைக் காணும் யாவரும் இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்க வேண்டுகிறோம்.

**பிரிவால் துயருறும்**

அன்பு கணவர்: **தாசு எழேன்**

மகன்கள்: **ஈவ் - ழெரார்** மருமகள்: **நத்தாலி**

பேரப்பிள்ளைகள்: **ஒலிவியே, ஒசேயான், ஓத் மற்றும் உறவினர்கள்.**

Posted on every Thursday at the H.P.O.Pondicherry-1 | Regd. RNI No:15968 | Regd.No.PY / 43 / 2021-2023

# விண்ணக வாழ்வின் 23-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி











**தோற்றம்**
**28-01-1939**

**மறைவு**
**25-01-2000**

## அருட்திரு. A. அருளப்பன்

குருப்பட்டம் : 20-12-1969

*"ஆண்டவர் எனது நேர்மைக்கு உரிய பயனை எனக்களித்தார், என் மாசற்ற செயலுக்கு ஏற்ப கைம்மாறு அளித்தார்." - திபா 18:46*

**கறைபடியா கரமுடன் வாழ்ந்து**
**நான் கரை காண, வழிகாட்டிய பாசமிகு அருட்தந்தையை**
**நன்றியோடு நினைவு கூருகிறேன்.**

பிரிவால் துயருறும்

**K. Subrayalu**

**KRS Builders,**

Tindivanam.

Published and Printed by Very Rev. Msgr. A. Arulanandam on behalf of Most Rev. Dr. FRANCIS KALIST, Archbishop of Pondicherry & Cuddalore. Printed at Mission Press, 196, Cathedral Street, Puducherry - 605 001.
Published from Mission Press, 196, Cathedral Street, Puducherry-605 001. Editor: Very Rev. Msgr. A. Arulanandam. Manager : Very Rev. Msgr. A. Arulanandam.